**சிறப்பு நீதிமன்றம் எண்.2 (LAOP), ஜெயங்கொண்டம்.**
**முன்னிலை: திரு.V.பிரேம்குமார்., B.A., B.L.,**
**சிறப்பு நீதிபதி எண்.2 (LAOP),**
**ஜெயங்கொண்டம்.**
**2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 04-ஆம் நாள் சனிக்கிழமை**
**IA.15/2026**
**in**
**OS.258/2020**

கலியபெருமாள் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. சிங்காரவேல்
2. பன்னீர்செல்வம்
3. பிரசாத்குமார்
4. கோவிந்தசாமி
5. மல்லிகா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 22.06.2026ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.R.சிவம் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இந்நீதிமன்றம் இன்று கீழக்கண்டவாறு வழங்கும்...

**உத்தரவு**

பிரதிவாதிகளின் கிரைய ஆவணங்களின் படி தாவா சொத்தின் பூஸ்திதி அமைப்பினை கண்டறிய வேண்டி நிள அளவையர் உதவியுடன் தாவா சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 26 விதி 9ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்:-**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். பிரதிவாதிகள் பெயரில் வழக்கு தாக்கல் செய்து அதில் மனுதாரரது தரப்பு விசாரணை முடிவுற்ற நிலையில் பிரதிவாதிகள் தரப்பு விசாரணை தொடங்கியுள்ள நிலையில், DW1 ன் குறுக்கு விசாரணைக்காக வேண்டி வாய்தா உள்ள நிலையில், மனுதாரரது தரப்பில் 26.12.1924 ம் தேதியில் வாதியின் பெரியப்பா முத்துகுமாரசாமி கிரையம் வாங்கிய சொத்தினை அவரிடமிருந்து, 15.08.1979 ம் தேதியில் வேலாயுத பத்தர் கிரையம் வாங்கியதாகவும், தவிரவும் அந்த பத்தரத்தில் கண்ட சொத்திற்கு கீழ்புறம் பரமசிவ பத்தர், செல்லம்மாள் வகையறாவிடமிருந்து கிரையம் வாங்கியதாகவும், அந்த இரு கிரைய பத்தரத்தின் படி 17.10.1979 ம் தேதியில் சுப்ரமணிய செட்டியார் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளதாகவும், அவர் இறந்த பிறகு அவரது மனைவி ராஜம்மாள், சின்னசாமி செட்டியாருக்கு 18.02.1936 ம் தேதியில்

கிரையம் கொடுத்துவிட்டதாகவும், மேற்படி சின்னசாமி இறந்ததும் அவரது மனைவி தையல்நாயகி அனுபவித்து வந்து, கோவிந்தசாமி செட்டியாருக்கு 17.04.1967 ல் உயில் எழுதி வைத்ததாகவும், அவர் இறந்த பிறகு அவரது மகன்களான கோவிந்தசாமி, சிங்காரவேல் அனுபவித்து வந்ததாகவும், அதனடிப்படையில் 18.05.2012ல் அவர்களுக்குள் பாக அட்டவணை ஏற்பட்டு கொண்டதாகவும், பாக அட்டவணையில் சிங்காரவேலு பாகத்திற்கு ஒதுங்கியதாகவும், அதனடிப்படையில் சிங்காரவேல் 3ம் பிரதவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டதாகவும், கூறி எதிரிடை கோரிக்கை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி கிரைய பத்தரத்தில் கண்ட சொத்துக்களும் தாவா சொத்துக்களும் வெவ்வேறு சொத்துக்களாகும். அதனை நிரூபிக்க வேண்டி தாவா சொத்தினை நில அளவையர் மற்றும் கிராம நிர்வாக அலுவலரின் மூலம் ரெவென்யூ ஆதரவுகளை வைத்தும் பூஸ்த்திதியினை வைத்தும் கண்டறிய வேண்டியுள்ளது. அவ்வாறு செய்வதால் நீதிமன்றத்தில் வேவையற்ற சாட்சிகளை தவிர்க்க இயலும். மேற்படி கியைர ஆதரவுகளின் நான்கெல்லைகளை வைத்து பார்த்தாலே தாவா சொத்தும் மேற்படி பிரதிவாதி கூறும் கிரைய ஆவணங்களில் கண்ட சொத்தும் வெவ்வேறு என்பது நிரூபணம் ஆகும். தாவா சொத்தில் பிரதிவாதிகள் பொருட்களை வைத்துள்ளதாக கூறியுள்ளார்கள். அதனையும் அவ்வாறு உள்ளதா என கண்டறிய வேண்டியுள்ளது.அதனால் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்வதால் தாவாவில் வாதியின் கட்சியையும்,

பிரதிவாதியின் கட்சியையும் உண்மை எது என கண்டறிந்து நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தால் நீதி பரிபாரணம் செய்ய உதவும். ஆகையால் தாவா சொத்தினை பொருத்து மேற்படி கிரைய ஆவணங்கள் படியும், நான்கெல்லைபடியும் அளந்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டியும், தாவா பூஸ்திதி அமைப்பினை கண்டறிய இந்நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்படுகிறது.

3) 2 ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 5 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-

மேற்படி வழக்கினை எப்படியாவது காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு வழக்கின் விசாரணையானது இருதரப்பிலும் முடிக்கப்பட்டு வாதுரைக்காக வாய்தா வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது காலம் கடந்து வழக்கு தாக்கல் செய்து 5 ஆண்டுகளுக்கு பிறகு தாவா இடத்தை கிராம நிர்வாக அலுவலர் நில அளவையர் மூலம் கண்டுபிடித்து அது வேறு சொத்து என்பதை காட்டுவதற்காக வழக்கறிஞர் நியமனம் தேவைப்படுகிறது என்று இந்த மனுவை தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ள இயலாது. வாதி வழக்குரையில் தாவா சொத்தின் அடையாளம் காண வேண்டும் என்ற எவ்விதமான வழக்குரையும் முன்வைக்காத நிலையில்

இருதரப்பிலும் சாட்சியம் முடித்துக்கொண்டு வாதுரைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கும் நிலையில் இந்த மனுவை உள்நோக்கத்தோடு தாக்கல் செய்துள்ளதாக தான் கருத வேண்டும். மனுதாரர் கூறுவது போல தாவா சொத்தை அடையாளம் காண்பதில் எவ்விதமான பூசலும் இல்லை. மனுதாரர் அவரது வழக்கிற்கு ஆதரவு தேடுவதற்காக ஆவணங்களில் மூலம் வழக்கை மெய்ப்பிக்க முடியாத நிலையில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

**5)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்ன வென்றால், இம்மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா?

**<u>6) பிரச்சனைக்கான தீர்வு:</u>**

(i) மனுதாரர் /வாதியால் அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3ம் பிரதிவாதி தரப்பில் தாவா சொத்து அவருக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரியும், வாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் எதிர் கோருரிமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது

வழக்கானது இருதரப்பு சாட்சிகளின் விசாரணைகள் முடிக்கப்பட்டு இறுதி விசாரணைக்காக நிலுவையில் உள்ளது.

(ii) அசல் வழக்கு மற்றும் எதிரிடைக்கோரிக்கையில் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் ஒரே சொத்துக்கள் ஆகும். மனுதாரர் தனது மனுவில் எதிரிடைக்கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கிரைய பத்திரத்தில் கண்ட சொத்துக்களும் அசல் வழக்கில் உள்ள சொத்துக்களும் வெவ்வேறு சொத்துக்கள் என்றும், மேலும் மேற்படி பிரதிவாதி கூறும் கிரைய ஆவணங்களின் நான்கெல்லையை வைத்து பார்த்தாலே தாவா சொத்தும், பிரதிவாதிகள் கூறும் கிரைய ஆவணங்களில் கண்ட சொத்தும் வெவ்வேறு என்பது நிரூபணமாகும் என்று குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் தனது மனுவில் ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்தாலே அசல் வழக்கில் கண்ட சொத்துக்களும், எதிரிடைக்கோரிக்கையில் கண்ட சொத்துக்களும் வெவ்வேறானது என்பது தெரியவரும் என்று ஒப்புக்கொண்டுள்ளதால் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையரின் தலையீடு அவசியமில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் அசல் வழக்கானது கடந்த 2019 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆரம்ப கட்டத்திலேயே வழக்கு விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்பு இந்த மனுவை தாக்கல் செய்யாமல் தற்போது காலம் கடந்து வழக்கு முடிவு எட்டப்பட உள்ள நிலையில் வழக்கை வீண் காலதாமதப்படுத்த வேண்டும் என்ற

நோக்கத்திற்காக மனுதாரர்/வாதியால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவிற்கு எந்தவித முகாந்திரமும் இல்லை. எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்யலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

**இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்ச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 4ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

PREMKUMAR Special Judge No II
Digitally signed by PREMKUMAR
Location: Jayankondam
Date: 2026.07.04 15:53:18 +1000

சிறப்பு நீதிபதி எண்.2 (LAOP),
ஜெயங்கொண்டம்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>** ...இல்லை...

PREMKUMAR Special Judge No II
Digitally signed by PREMKUMAR
Location: Jayankondam
Date: 2026.07.04 15:52:52 +1000

சிறப்பு நீதிபதி எண்.2,(LAOP),
ஜெயங்கொண்டம்.